IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 119/2011

சாட்சி : PW2

பெயர் : ராஜா சக்கரவர்த்தி                    தேதி: 27-03-2024

**<u>2 முதல் 5, 11 மற்றும் 12ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு சம்மன் எதுவும் வரவில்லை. வழக்கறிஞர் சாட்சியம் அளிக்குமாறு தெரிவித்தார். 2ம் வாதி என்னுடைய தந்தை என்றால் ஆமாம். 1ம் வாதி என்னுடைய உறவினர் என்றால் ஆமாம். கிரய உடன்படிக்கை எழுதிய தேதியில் வேறு ஆவணங்கள் எழுதவில்லை. கிரய உடன்படிக்கையில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. அதை நான் கைப்பட எழுதவும் இல்லை என்றால் ஆமாம். கிரய உடன்படிக்கை ஏற்பட்டபோது நான் உடன் இருந்து பார்த்ததாக வாதிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு நான் உடன் இருந்தது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வ.த.சா-1 வா.த.சா.ஆ-A1 கிரய உடன்படிக்கை ஏற்பட்ட போது நான் உடன் இருந்ததாக எதுவும் கூறவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. AS.26/2005 ல் மேல்முறையீட்டு வழக்கில் நானும், என் தகப்பனாரும் தரப்பினர்கள் அல்ல என்றால் ஆமாம். வா.த.சா.ஆ-A3 சட்ட அறிவிப்பை பிரதிவாதிகள் எந்த தேதியில் பெற்றுக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். SA. 537/2006 வழக்கு சம்மந்தமான விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்காக முச்சலிக்கா தயாரிக்கப்பட்டதாக நான் பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தாவாவை எந்த தேதியில் தாக்கல் செய்தார்கள் என்று எனக்கு

நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். வட்டி 12% தரவேண்டும் என்று தனியாக ஒப்பந்தம் செய்து கொண்டார்களா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் வாதிகள் உடன் சேர்ந்து பொய்யாக தயார் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ–A15 முதல் வா.த.சா.ஆ–A17 வரையிலான ஆவணங்களில் என் பெயர் இல்லை என்றும், அதில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் ஆமாம்.

**<u>6 முதல் 10 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவாவில் எத்தனை பிரதிவாதிகள் என்று எனக்கு தெரியாது. 5 பிரதிவாதிகள் எனக்கு தெரியும். 6 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமையுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்குள் உயர்நீதிமன்றத்தில் SA. 537/2006 தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் கிரய உடன்படிக்கை 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ளது செல்லதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி AS. 26/2005 நிலுவையில் இருந்த சமயத்தில் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. இரண்டாவது மேல்முறையீடு சென்னையில் உள்ளதாக தரப்பினர்கள் சொன்னார்கள். 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளும் 6 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளும் உறவினர்கள் என்றால் ஆமாம். அவர்களுக்கு இடையில் உள்ள பிரச்சனைகளை பயன்படுத்திக்கொண்டு 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் வாதிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு வா.த.சா.ஆ–A1 கிரய உடன்படிக்கை போலியாக தயார் செய்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து யாருக்கு

உரிமையானது என்பது சம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருந்து வரும் சமயத்தில் அதை தீர்மானிப்பதற்கு முன்பாக ஏற்படுத்திக் கொண்ட வா.த.சா.ஆ–A1 கிரய உடன்படிக்கை ஏற்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 6 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளை ஏமாற்றுவதற்காக 1 முதல் 5 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து போலியாக வா.த.சா.ஆ–A1 கிரய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.